# நாஸரின் இறுதிச் சடங்கில் பிரதமர் சிறிமா


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15    ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன் : 389

மலர் 12
இதழ் 231
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 14 றஜபு 28 புதன்கிழமை (30-9-70)



நவநாகரீக நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
R. G. பில்டிங்,
50, கன்னுதிட்டி யாழ்ப்பாணம்
போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'
உரிமையாளர்: க. கிருபாகரன்
இரத்தினம் ஆபரண மாளிகை
உரிமையாளர் (காலஞ்சென்ற)
திரு. K. V. கனகரத்தினம் J. P.
அவர்களின் மருமகன்


# பங்கு பற்றுவார்

## "ஈடு செய்யமுடியாத பெரு நஷ்டம்" - சிறிமா

கொழும்பு, செப். இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் சார்பில் ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் கேணமல் காமல் அப்துல் நாஸரின் இறுதிச் சடங்குகளில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கலந்து கொள்வார்,

ஐக்கிய முன்னணி அரசின் மந்திரிசபை இன்று அவசரமாகக் கூடி இந்த முடிவை எடுத்துக் கொண்டது.

வியாழக்கிழமை நடக்கும் நாஸரின் இறுதிச் சடங்குகளில் திருமதி ஸ்ரீமா கலந்து கொள்வார்.

''ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் அதிபர் நாஸரின் மறைவு பொதுவாக உலக மக்கள் அனைவருக்கும் குறிப்பாக நடுநிலைமை நாடுகளுக்கும் ஏற்பட்ட ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'' என்று இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அதிபர் நாஸரின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'பதினெண்காண்டு அவர் நடாத்திய ஆட்சியில்பொருளாதாரவளமிக்க ஜனநாயக சோஷலிச நாடாக அரபுக்குடியரசை மாற்றி நவீன உலகமொன்றை சிருஷ்டித்தார் அவரைநான்பலதடவை சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். அவரின் ஆற்றலும் திறமையும் சொல்லி அடங்கா'' என்று பிரதமர் அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

'அரபு மக்களினது மாபெரும் தலைவர் நாஸர் அவர்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியகாத்திகழ்ந்தார். அவர் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பு' என்று பிரதமர் தெரிவித்தார்,

அரபுக்குடியரசின் பதில் தலைவருக்கும், திருமதி நாஸருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அதிர்ச்சியையும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# அரபுக்குடியரசு அதிபர் நாஸர் மாரடைப்பால் காலமானர்

கெய்ரோ, செப். 29

**ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபரும், அரபு உலகின் தன்னிகரற்ற தலைவராக விளங்கியவருமான கேணல் கமால் அப்துல் நாஸர் நேற்றிரவு காலமானர்.**

ஜோர்டான் மன்னர் ஹுசேனையும், அரபுக் கொமாண்டோக்களின் தலைவர் யாஸிர் அரபாத்தையும் அமைதி உடன்படிக்கையொன்றில் கையெழுத்திடச் செய்துவிட்டு வீடு திரும்பிய அதிபர் நாஸர் மாரடைப்புக்குப் பலியானர்.

அதிபர் நாஸர் மரணமான செய்தியை வானொலியில் கேட்ட எகிப்திய மக்கள் அதனை நம்ப மறுத்து அதிபர் மாளிகையை நோக்கி ஆயிரக்கணக்கில் திரண்டு சென்றனர்கள். தெருக்களில் மக்கள் கூடிநின்று வாய்விட்டுப் புலம்பி அழுதார்கள்.

"அரபு உலகமே உன் தன்னிகரற்ற தலைவனை இழந்துவிட்டாயே" என்று வயோதிபர்கள் அரற்றினர்கள்.

## 40 நாட்களுக்கு தேசிய துக்கம்

அதிபர் நாஸர் மரணத்தையொட்டி அரபுக் குடியரசு மக்கள் 40 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கவிருக்கிறர்கள். மூன்று நாட்களுக்கு அரசாங்கம் துக்கம் அனுஷ்டிக்கும். அடுத்த வியாழனன்று அதிபர் நாஸரின் இறுதிக் கிரியைகள் நடைபெறும், அதுவரைக்கும் அதிபர் மாளிகையில் அவர் சடலம் மக்கள் மரியாதை செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும்,

## தற்காலிக அதிபர் நியமனம்

அதிபர் நாஸர் மரணமானதைத் தொடர்ந்து துணை அதிபர் அன்வர் சதாக் தற்காலிக அதிபராக நியமனம் பெற்றிருக்கிறர். தேசிய சட்டசபையில் இதனை அதன் சபாநாயகர் அறிவித்தார், திரு. சதாக் 60 நாட்களுக்கு இப்பதவியில் இருப்பார். இந்த இடைக்காலத்தில் புதிய அதிபர் ஒருவர் தெரிந்தெடுக்கப்படுவார்.

அதிபர் ஒருவர் மரணமுற்றல் துணை அதிபராக விருப்பவர் தாமே தற்காலிக அதிபராகப் பதவி உயர்வு பெறுவதற்கு எகிப்திய அரசியல் சட்டம் வகை செய்கின்றது.

நேற்றுமாலை அதிபர் நாஸர், அரபுத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, தமது இல்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அனுதாபக் கூட்டம்

ஐக்கியஅரபுக் குடியரசின் தலைவரும் அரபு உலகின் தலைவருமான கமால் அப்துல் நாஸரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும் என்று யாழ். மாநகரசபைஉறுப்பினர்கள் ஜனப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதர், ஜனப் எம். ஜி. பசீர் ஆகியோர் தெரிவிக்கிறர்கள்

அரபு தேசத்தின் காவலனும் எகிப்திய புரட்சியாளனும் தலைசிறந்த தலைவனுமாகிய ஒரு வீரனை இழந்து துடிதுடிக்கும் முழு இஸ்லாமிய உலகுடனும் யாழ்ப்பாண முஸ்லிம்களும் பங்கு கொள்கிறர்களென்று விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசுத் தூதுவரகத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் பெருந்திரளான மக்கள் இன்று காலையிலிருந்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கையொப்பமிட்டு வருகிறர்கள்.

## விக்கிரமாதித்தன் காலத்து தங்கநாணயம்

புதுடில்லி, செப். 29

இந்திய புதைபொருள் ஆராய்ச்சி பகுதியினர் இரண்டாவது சந்திர குப்த விக்கிரமாதித்தன் காலத்துத் தங்க நாணயம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்கள்,

மேற்படி புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் அகழ்வாராய்ச்சி நடாத்தியபோது இத் தங்கநாணயம் அவர்களுக்குக் கிடைத்தது,

## இயந்திரங்களிற் சிறந்தது "டீசல்"

## இறுதிச்சடங்குகள்

## சோஷலிஸ பாதையில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரபு உலகமே உன் தன்னிகரற்ற தலைவனை இழந்து விட்டாயே" என்று வயோதிபர்கள் அரற்றினர்கள்.

... இந்த இடைக்காலத்தில் புதிய அதிபர் ஒருவர் தெரிந்தெடுக்கப்படுவார்.

...ளின் மாநாட்டில் ... கொண்டு விட்டு, ... இல்

(4-ம் பக்கம் பார்க்க)


கொழும்பிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசுத் தூதுவ...

தங்கதாணயம் அவர்களுக்குக் கிடைத்தது.

...கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)


# இயந்திரங்களிற் சிறந்தது "டீசல்"
## டீசலில் சிறந்தது யன்மா "டீசல்"




விவசாயப் போட்டி (15-9-69) முதலாவது இடம் பெற்றது
**யன்மா "டீசல்"**

யாழ் மாவட்ட விவசாய விழா (15-12-69) முதலாவது இடம்பெற்றது
**யன்மா "டீசல்"**

யாழ் மாவட்ட விவசாய உழவுப் போட்டி (1-9-70)
முதலாம் இடமும், இரண்டாம் இடமும் தட்டிக்கொண்டது
**யன்மா "டீசல்"**

பொலிஸ் விழா (7-9-70) முதல் இடம்பெற்றது
**யன்மா "டீசல்"**

**உலகில் மலிந்தது யன்மா டீசல் அல்ல, ஆனல்**
**உலகிற் சிறந்தது யன்மா "டீசல்" இரு சில் டிருக்டர்**

ஏக விநியோகஸ்தர்கள்:

## "செல்வலக்ஷ்மிஸ்"

யாழ்ப்பாணம் — பரந்தன்.


# இறுதிச்சடங்குகள் வியாழக்கிழமை

நாஸரின் இறுதிச்சடங்குகள் அடுத்த வியாழக்கிழமையன்று இலங்கை நேரம் சுமார் 12 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் இப்பொழுது குப்பே குடியரசு மாளிகையில் ராஜமரியாதையுடன் மக்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டுள்ளது. அதிபரின் மரணச் செய்தி கிடைத்ததிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மாளிகையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். மாளிகையின் எல்லா வாயில்களிலும் மக்கள் கூட்டம் அடைத்துக்கொண்டிருக்கின்றது பாதைகளில் மயங்கிவிழும் பெண்களுக்கு அவசர சிகிச்சையளிப்பதில் அம்புலன்ஸ் படைகள் ஈடுபட்டுள்ளன.

சூயஸ்கால்வாய்ப் பகுதியில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### ஐ. நா.வில் கவலை

அதிபர் நாஸரின் மரணச் செய்திகள் கிடைத்தவுடன் ஐ. நா. அரசியல் கமிட்டிக் கூட்டம் ஒத்திப்போடப்பட்டது. பிரதிநிதிகள், பரிவு தெரிவிக்கும் செய்திகளை விடுத்தார்கள். அமெரிக்க அதிபர் ஜோன் எப். கென்னடியின் கொலையின்போது நிலவியதுபோல் இப்பொழுது சோகம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

மேற்காசியாவில் உள்ள நாடுகள் பலவற்றில் 7 முதல் 40 நாட்கள் வரை துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### இந்திரா வருத்தம்

அதிபர் நாஸர் துணிவு மிக்க அரும்பெரும் தலைவர் என்று இந்தியப் பிரதமர் விடுத்துள்ள பரிவுச் செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். அரபு மக்களுக்கும், உலக அமைதிக்கும் அவர் ஆற்றிய பணிகளை வரலாறு எடுத்துக்காட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமது தந்தையாரின் நெருங்கிய நண்பர் என்ற முறையில் நாஸரின் மறைவு சொந்தமுறையிலும் தமக்கு ஆழ்ந்த துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

### இந்தியாவில் 3 நாள்துக்கம்

நாஸரின் மரணத்தையொட்டி பாரதம் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்கும் இறுதிச்சடங்குகள் நடக்கும் வியாழக்கிழமை அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் மூடப்படும். இந்தியசரித்திரத்தில் வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு இந்தியா இப்படி மரியாதை செலுத்துவது இதுவே முதற்தடவையாகும்

### எம். ஸி. பொலிஸில் புகார்

# வல்லிபுரகோயில் கதவடைப்பு!

யாழ்ப்பாணம், புதன்

ஆலயத்தினுள் சென்று வழிபடமுடியாதபடி கதவுகளைப் பூட்டி வைத்திருப்பதாக வல்லிபுரக் கோயில் நிர்வாகத்தின் மீது அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபைத் தலைவரும், நியமன எம். பியுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நேற்று பொலிசில் புகார் செய்துள்ளார். அவருடன் திருவாளர்கள் எஸ். கே. துரைசிங்கமும், சிற்றம்பலமும் இதே போன்று புகார் செய்துள்ளனர்.

நேற்று வல்லிபுரக்கோயில் கொடியேற்ற உற்சவத்தை முன்னிட்டு சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் வழிபடச்சென்ற 50 பேர் ஆலயக்கதவுகள் பூட்டியிருந்ததைத் தொடர்ந்து அங்குள்ள பொலிஸ்நிலையத்தில் மேற்கண்ட புகாரைச்செய்தனர்.

கதவுகள் பூட்டப்பட்டிருந்தபோதிலும் கொடியேற்றம் நடந்தது. உற்சவத்தைத் தொடர்ந்து ஆலயத்துக்குச் செல்வதென சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்காரியக்கமிட்டி முடிவு செய்துள்ளது. (கு. வி.ம)

# சோஷலிஸ பாதையில் தான் உரிமைகளைப் பெறலாம்

## குமாரசூரியர்

யாழ்ப்பாணம், புதன்

"நாங்கள் மார்தட்டி எல்லாக் கஷ்டங்களையும் தீர்ப்போம் என்று கூறினல் நீங்கள் நம்பக்கூடாது. பல காலமாக நாம் பறிகொடுத்த உரிமைகள் சோஷலிஸ பாதையில் பொருளாதாரத்தை முன்னேற்றினல் தானகவே கிடைக்கும்.

யாழ்ப்பாணம் சுதந்திரக் கட்சிக் கிளையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். சுதந்திரக் கட்சிக் கிளைத் தலைவர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. வ. பொன்னம்பலம், திரு. ஏ. விஸ்வநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திரு. குமாரசூரியர் மேலும் கூறியதாவது:

சக்தி, சிவன் என்ற வடிவம் ஒன்ருக காட்சி அளித்தது போல் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கலைகலாச்சாரங்களை தனித்தனியாக வளர்த்து இலங்கையர் என்ற நாமத்தோடு இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒற்றுமையாக உழைத்தால்தான் இந்நாடு முன்னேறும்.

ஒவ்வொரு மாதமும் கூட்டணி கட்சிகளின் செயலாளர்கள் கூடி ஆலோசனை செய்வதென்றும் பிரசாரக் கூட்டங்கள் நடாத்துவதென்றும் புதிய கிளைகளை திறப்பதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


# "அரைக் கம்பத்தில் பறக்கவிடுக"

யாழ்ப்பாணம், புதன்

அரபுக்குடியரசின் அதிபர் நாஸரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபக்கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட வேண்டுமென்ற கோரிக்கையை ஜனுப் எம். ஜி. பஷீர் யாழ். நகர முதல்வரிடம் விடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்களடங்கிய கூட்டமொன்றை உடனடியாகக் கூட்டவும் அவர் முதல்வரிடம் கோரியுள்ளார்.

நாளை நடைபெறும் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து சகலகட்சிப்பிரமுகர்களடங்கிய பொதுக் கூட்டம் ஒன்றைநடத்தவும் ஜனுப் பஷீர் முயற்சி எடுத்து வருகிறார்"



யாழ் மாவட்ட இரு சில் உழவுப் போட்டியில் யன்மா டீசலை உபயோகித்து முதல் இடம் பெற்ற திரு. கே. கதிர்வேல்நாதன். (பரிசு பெறுவோர் விபரம் 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E. (O/L) எண் கணிதம் 1963—1969வினாக்களும் செய்கை விளக்கமும் 10 வினாப்பத்திரங்களும் வாய்ப்பாடும். விலை: 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 2981

அச்சுவேலி சந்தைக்கும் வல்லை சந்திக்கும் இடையில் றோட்டுக்கு அருகாமையில் பன்னிரண்டரைப் பரப்புக் காணியும் சந்நிதி றோட்டில் மூன்றரைப் பரப்பு தோட்ட நிலமும் உடன் விற்கப்படும். குடியிருப்புக்கு ஏற்றது. விபரங்களுக்கு: சி வீரசிங்கம் ஆசிரியர், ஆஸ்பத்திரிவீதி. அச்சுவேலி. 2977

கலனுக்கு 200 மைல் இயங்கும் றலி மோப்பெட் சைக்கிள் 4 Sri Raleigh moped Cycle) விற்பனைக்குண்டு. விலை ரூபா 850/-. நா. தியாகராசா, 34/5, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். 2985

காணி:
நல்லூர் செட்டித்தெருவில் இரண்டரைப் பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்கப்படும். விபரங்களுக்கு: 102, அம்பலவாணர்வீதி, யாழ்ப்பாணம். 2984

வேம்பு - 14 அடி உயரம், 7 1/4' சுற்றளவு; புளிய மரம் ஒன்று விற்பனைக்குண்டு. விபரம்: சுதேச வைத்தியசாலை, Police Station View (ஒழுங்கை) சுன்னாகம். 2982

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் வீடு கட்டுவதற்கேற்ற ஒன்பது பரப்பு நிலம் உடனடியாக விற்பனைக்குண்டு. காங்கேசன்துறை வீதியில் இருந்து நூறு யார் தூரத்தில் உள்ளது. முழுதாக அல்லது மூன்று துண்டுகளாக பிரித்து விற்கப்படும். ''லாண்ட் இன்வெஸ்ட்மென்ட்'', 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2983

### தேவை

யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற (Fruit Canning) பழம், ஜாம் வகைகள் பதம் படுத்தும் தொழிற்சாலைக்கு வேலை செய்யும் பங்காளர்களாக இருபாலாரும் (Educated Boys & Girls) 23 வேலை செய்யும் பங்காளர்கள் தேவை. கல்வி விபரங்களும், பங்கு பணமாக கொடுக்கும் தொகை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2978, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2978

அப்பளம், பற்பொடி, சவுக்காரம், தைலவகை, ரொபி, இனிப்பு வகை, பழரச பானவகை இவற்றில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. முன் அனுபவம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். தகைமைக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும். விளம்பர இல: 2402, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2402

திருநெல்வேலியிலுள்ள மக்கள் கைத்தறி நிலையத்தில் நெசவுவேலை செய்வதற்குப் பயிற்றப்பட்ட, பயிலவிரும்பும் ஆண்கள், பெண்கள் தேவை. நேரில் வரவும். விவேகானந்த ரெக்ஸ்ரைல்ஸ், 22, பெரிய கடை, யாழ்ப்பாணம். 2401

### வாடகைக்கு

வீடு:
மின்சாரமற்ற வசதியுள்ள வீடு உடனே வாடகைக்குக் கொடுக்கப்படும். மாதம் ரூபா 75/-. நா. தியாகராசா, 34/5, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். 2986

### விற்பனைக்கு

கட்டிடக்காணி:
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பாண்டியந்தாழ்வில் கொழும்புத்துறை றோட்டுக்கு அண்மையில் 2 1/2 பரப்பு கட்டிடக் காணி விற்பனைக்குண்டு. திரு. சா. அந்தோனிப்பிள்ளை, 70/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 2979

## பண்டத்தெருப்பு கிராமசபை கேள்வி விளம்பரம்

பண்டத்தெருப்பு கிராமசபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைக்கு 1970-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ம் திகதி காலை 9-30 மணி வரை சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 10/-ம், கட்டுப் பணமாக ரூபா 50/-ம் கட்டியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் 10-10-70 மாலை 3.00 மணிவரை வழங்கப்படும். இதற்கான ஏனைய விபரங்கள் யாவும் கிராமசபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

வேலையின் விபரம்
இளவாலை லூர்துமாதா கோவில் றோட் திருத்தம்.

ஐ. சி, கனகசபாபதி ஜே பி
தலைவர்.
கி. ச. பண்டத்தெருப்பு,
30-9-70 2477

## விக்னேஸ்வராவுக்கு வெற்றி

உடுப்பிட்டி செவ்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மேற்பிரிவு உதைபந்தாட்ட வீரர்களுக்கும் கரவெட்டி லயன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களுக்கு மிடையே நடைபெற்ற உதைப்பந்தாட்ட மோதலில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீரர்கள் 5—0 கோல் களால் வெற்றியீட்டினர்.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
ஜெய்சங்கர்—நிர்மலா
நடித்த
**காதலித்தால் போதுமா?**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
என். ரி. ராமராவ்-ஜெயலலிதா
நடித்த
**விடாக் கொடாக் கண்டன்**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
மாலாசின்கா-விஜயகுமார்
நடித்த


பாடசாலை உதைபந்தாட்டம்:

## ஸ்கந்தவரோதயா வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே, நேற்று முன்தினம், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது.

மேற்படி இரு கல்லூரிகளின் ஆட்டம் ரசிப்பாகவே காணப்பட்டது. போட்டி தொடங்கி பத்து நிமிடங்களுக்கிடையில் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டது. இதைத் தொடர்ந்து யூனியன் கல்லூரியும் இரண்டு கோல்களைப் போட்டது. ஆனால் இடைவேளைக்கு சற்று முன்பாக ஸ்கந்தவரோதயாக்கோஷ்டி மேலும் இரண்டு கோல்களை ஒன்றின்பின் ஒன்றாகப் போட்டது இடைவேளையின் போது ஸ்கந்தவரோதயா 4—2 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் விறுவிறுப்படைந்தது. யூனியன் கல்லூரி மேலும் ஒரு கோலைப் போட்டது.

ஆட்டம் முடிவடையும் போது ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4—3 கோல்களால் யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

பாடசாலையில்

## 'வெளிவிடையங்களுக்கு இடமளிக்கக் கூடாது'

— வட்டு. எம். பி.

சுழிபுரம், திங்கள்

'தமிழ் பேசும் மக்களுக்கு இன்றியமையாத ஒரு சாதனமாக இருப்பது கல்வியாகும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் பொருளாதார பலம் இல்லாது இருந்தாலும் கடன் பட்டு கல்வியைப் போதிக்கின்றனர். இன்று இக்கல்வியைப் போதிக்கும் பாடசாலைகள் கல்லூரிகளில் பல வகையான கஷ்டங்கள் ஆசிரியர்களின்பற்றாக்குறை, கட்டிட வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியுள்ளன. இவற்றை எல்லாம் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஒன்றுபட்டுத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் நல்ல கல்வியைப் புகட்டி நல்ல பிரஜைகளாக வாழ பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டும்".

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்றோர்-ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தி[illegible]ராசா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தியாகராசா மேலும் பேசுகையில், பாடசாலைக்குப் கல்லூரிக்குள் வருமானால் அங்கு பெரும் பிரச்னையாகவே இருக்கும். ஆசிரியர்கள் தமது கடமைச் செய்யாது இருப்பாரானால் அவர்களை வேறு இடத்திற்கு நாம் மாற்றம் செய்யவேண்டும். பிள்ளைகளின் முன்னேற்றம் ஆசிரியர்களின் கையில் தான் தங்கியுள்ளன. பிரச்னைகள் இருக்கத்தான் வேண்டும். அவற்றை எல்லாம் பேசித் தீர்க்க வேண்டும். அப்போது தான் நல்ல தெளிவு ஏற்படும். கல்வி சம்பந்தமான பொதுப் பிரச்னைகள் பல உண்டு. அவற்றை எல்லாம் கல்வி அமைச்சருடன் பேசித் தீர்க்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

ஒக்டோபர் முதல்

## ஓவசியர் முறை நீங்கும்?

கோட்டை, செவ்வாய்

பொதுவேலைப் பகுதி 'ஓவசியர்' முறை ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நீக்கப்படும்.

பொதுவேலைப் பகுதியில் இந்த ஓவசியர்முறை காலனி ஆட்சிக்குப்பின்ன ஏற்பட்டதாகும். நாடு சுதந்திர மடைந்த பின்னர் சில அரசாங்கங்கள் பொதுவேலைப் பகுதி ஓவசியர் முறையை [illegible]

சினிமா விமர்சனம்

## விடாகண்டன் கொடாகண்டன்

விடாகண்டன், கொடாகண்டன் இருவரையும் சந்திக்கவேண்டுமா? இணுவில் ஸ்ரீ காலிங்கன் தியேட்டருக்கு செல்லுங்கள் விடாகண்டனாக ராமராவும் கொடாகண்டனாக காந்தராவும் சக்கை போடு போடுகிறார்கள் ''அத்தியேட்டரில்'' ஓடிக்கொண்டிருக்கும் ''விடாகண்டன் கொடாகண்டன்'' படத்தில்,

பழைய ராஜா ராணிக் கதை தான். இளவரசிக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளைக் கொல்ல சூழ்ச்சி நடக்கிறது இரக்க மனம் கொண்ட காவலர்கள் அவர்களைக் கொல்லாமல் இரண்டு வெவ்வேறுகுடும்பங்களிடம் அக்குழந்தைகளை ஒபபடைக்கின்றனர், இந்த இரண்டு பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்களாகிறார்கள். திருட்டு வேலையில் ஈடுபடுகின்றான் விடாகண்டன். இருப்பவர்களிடம் எடுத்து இல்லாத வர்களுக்கு அவன் கொடுக்கிறான். இதேநேரத்தில் சோழநாட்டு இளவரசியின் இதயத்தையும் திருடிவிடுகிறான். விடாகண்டன் சோழநாட்டு இளவரசியின் காதலனாகிறான், தங்கப் பதக்கங்களை கைப்பற்றுவதில் இருவருக்கும் போட்டியேற்படுகிறது. இதேநேரத்தில் பாண்டிநாட்டுக்கு சூழ்ச்சி மூலம் இளவரசினாக நினைக்கிறான் வடிவு நாதன் மூவரும் ஒவ்வொருவருக்கும். பகையாளிகளின் தங்கப்பதக்கம் மூலம்புதையலை கண்டு பிடிப்பதில் மூவருக்கும் போட்டியேற்படுகிறது. முடிவில்வடிவுநாதனை விடாகண்டனும் கொடாக்கண்டனும்சேர்ந்துஎதிர்த்து அவனை வென்று புதையலை கண்டு பிடித்து விடுகிறார்கள்.

சோழநாட்டு இளவரசியாக ஜெயலலிதாவருகிறார். வாள்ச் சண்டை, கத்திச் சண்டை குதிரையோட்டம் எல்லாம் இருக்கின்றன

விஜயலலிதா விடமும், அவர் அம்மாவிடமும் வாத்தை கொடுத்து இது பொன்முட்டை இடும் வாத்து என்று விடாகண்டன் ஏமாற்றுவதும், விஜயலலிதா அந்தவாத்தை சுற்றிவந்து வணங்கி பூஜை செய்து ''பொன்முட்டை போடு'' என்று கேட்பதும் அது சாதாரணமுட்டை போடும்போது ஒப்பாரிவைப்பதும் நம்மை சிரிக்கவைக்கக்கூடியவையாகவுள்ளன

தந்திரக்காட்சிகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன, பாடல்கள் பலவுண்டு, சண்டைக்காகவும், நகைச்சுவைக்காகவும், பொழுது போக்கிற்காகவும் பார்க்கலாம்.

சிந்தனைச் செல்வன்.

## 'சுதந்திர போராட்டத்துக்கு பாரதி ஒரு வழிகாட்டி'

— உடுவில் எம். பி.

உடுவில், செவ்.

கம்பர், இளங்கோ போன்ற பல பெரியோர்கள் தமிழை வளர்க்க முற்பட்டு அரிய பல நூல்களை எல்லாம் இயற்றியுள்ளார்கள். இப்படியானவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் உலகில் தோற்றுவார்கள். கம்பர், இளங்கோ போன்ற பெரியார்களின் பாடல்களுக்கும் பாரதி பாடல்களுக்கும் ஒரு சிறு வேறுபாடு. முன்னவர்களின் பாடல்களை ஓர் ஆசிரியரின் உதவிகொண்டே படிக்க முடியும், பாரதி பாடல் சாதாரண மக்களும் படிக்க முடியும். உலக சுதந்திர போராட்டங்களுக்கு எல்லாம் பாரதி கவிதைகள் ஒரு வழிகாட்டியாக இருந்தன.''

சுன்னாகம் இளந்தென்றல் [illegible] தில், பட்டங்களைபெறவும் சட்டங்களை இயற்றவும் கூடிய முறையில் பெண்ணினம் வளரவேண்டும் என்றே பாரதி கூறினார். அதைவிடுத்து நாகரீகம் என்றபோர்வையில், கலை, கலாசாரத்துக்குமாறான வழிகளில் பெண்கள் முன்னேறுவதை பாரதி விரும்பவில்லை.

ஆசிரியர் புதுமைலோலன் பேசுகையில் பாரதி தன் இனத்தை, மொழியை, எவ்வளவு நேசித்தாரோ அதேயளவு உலகத்தையும் நேசித்தார் என்று கூறினார்.

ஆசிரியர் நாவேந்தன் உட்பட வேறுபலரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளாக பரதநாட்டியம், நாடகம் ஆகியன நடைபெற்றன.

## 'கறுப்புசந்தையை அடியோடு ஒழியுங்கள்'

கோட்டை, செவ்வாய்

'கறுப்புச் சந்தைக்காரர்களை ஒழிப்பதில் தகுதிவாய்ந்தவர்கள் என நீங்கள் காட்டாவிட்டால் விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களாக என்னைக் காணுவது இதுவே கடைசி முறையாகும்.'

தனது அலுவலகத்தில் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களை அழைத்து நடாத்திய மகாநாட்டில் உரையாற்றிய உள்நாட்டு வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார், அமைச்சர் மேலும் தொடர்ந்து பேசுகையில் வியாபாரிகள் விலைக்கட்டுப்பாட்டு விதிகளை மீறி வெளிப்படையாகவே பொருட்களின் விலைகளைக் கூட்டி விற்கிறார்கள். இந்த நிலையிலிருக்கும்போது விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் பகுதி என ஒன்று ஏன் இருக்கவேண்டும். கடந்த காலங்களில் இப்பரிசோதகர்களுக்கு விலைக்கட்டுப்பாட்டு விதிகளைச் செயல்படுத்துவதில் கஷ்டமிருந்திருக்கலாம், ஆனால் தற்போது முன்னைய நிலைமைகள் இல்லை. ஆதலால் நீங்கள் இனிமேல் ஒருவருக்கும் பயப்படத்தேவையில்லை.

## நல்லையில் பாரதிவிழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதின முன்றலில், இன்று மாலை நடைபெறவிருக்கும் பாரதி விழாவிற்கு உதவி மேயர் திரு. ஏ துரைராஜசிங்கம் தலைமை தாங்குவார். யாழ். மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா, திரு. வி. பொன்னம்பலம் செல்வி புஷ்பா செல்வநாயகம் உரை நிகழ்த்துவார்கள்.

திரு. பத்மநாதபிள்ளை குழுவினரின் மங்கள வாத்தியத்துடன் விழா ஆரம்பமாகும். இசைப் புலவர் என். சண்முகரத்தினம் இசைவிருந்தளிப்பார்.

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

யாழ். சங்கீத சபையின் ஆதரவில் இன்று மாலை யாழ்ப்பாணம் கலைமன்ற மண்டபத்தில், திரு. கே, ஆர். நடராசாவின் இசைக் [illegible]


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த
**ஒரு விரல்** (ஒரு மர்ம சித்திரம்)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெமினி—பத்மினி—நாகேஷ்
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி—பத்மினி—நாகேஷ்
ஜெய்சங்கர் வாணிஸ்ரீ
நடித்த
# எதிர்காலம்

REGAL JAFFNA
Daily 4 Shows
LEE MARVIN, BURT LANCASTER,
CLAUDIA CARDINALE in
# THE PROFESSIONALS
[ADULTS]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
# வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாம் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம்...



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
# துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
மாலாசின்கா-விஜயகுமார் நடித்த
# திலகி
(DILAGI)
(ஹிந்தி)

[illegible] ராசா குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. எஸ். வெசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஆ. தியாகராசா மேலும் பேசு [illegible]ல், பாடசாலைக்குப் புறம்பான விடயங்களை பாடசாலைக்குள் கொண்டு வராது பார்த்துக்கொள்ள வேண்டும். வெளிவிடயங்கள்

[illegible] பொதுவேலைப் பகு[illegible]ல் இந்த ஓவசியர் முறை காலனி ஆட்சிக்குப்பின்ன ஏற்பட்ட தாகும் நாடு சுதந்திர மடைந்த பின்னர் சில அரசாங்கங்கள் பொதுவேலைப் பகுதி ஓவசியர் முறையை [illegible] வேண்டுமெனத் தீர்மா[illegible]த்தன. ஆனுல் எதுவும் இத்தீர்மானத்தைச் செயல் படுத்தவில்லை

வண்ணப்பட ஒலிப்பதிவிலும்; எண்ணப்படியான காட்சி அமைப்பிலும் சிறந்த பாடல்களுக்கும் பரிசுபெற்ற படம்
# யாழ். வின்ஸர் திரையில்
இன்று முதல் ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன் ★ காஞ்சனா
★ நாகேஷ் ★ மஞ்சுளா
நடித்த




உங்கள் குழந்தைச் செல்வங்களுடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

முடியும். பாரதி பாடல் சாதாரண மக்களும் படிக்க முடியும். உலக சுதந்திர போராட்டங்களுக்கு எல்லாம் பாரதி கவிதைகள் ஒரு வழிகாட்டியாக இருந்தன.''

சுன்னுகம் இளந்தென்றல் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவில் சிறப்பு சொற்பொழிவாற்றிய உடுவில் தொகுதி எம். பி. திரு. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சுன்னுகம் பிரபல வர்த்தகர் திரு சபாரத்தினம் தலைமை வகித்தார்.

உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

அறநெறிமூலம்புரட்சியை ஏற்படுத்தவே பாரதிமுற்பட்டான். ஆனுல் இன்று நாம் காணும் புரட்சிமுறை அடக்குமுறைபடும் புரட்சி முறையாகும் நம்மிடையே நாமே சாதிப்பிரிவினைகளை கிளப்பிவிட்டு பின்னர் அதை தீர்க்க முற்பட்டு பிரச்னைப் படும் நிலையில் உள்ள நாம் பாரதியைப் பற்றியும் அவரின் குணங்களைப் பற்றியும் பேச என்ன தகுதி இருக்கிறது. பெண்கள் விஷயத்

## புறக்கணிப்புக்கு காரணம்

உடுப்பிட்டி, செவ்வாய்

தொழில் இணைப்புக் காரியாலயங்களின் மூலம் தொழில்பெறும் பொருட்டு தமது பெயர்களைப் பதிவு செய்திருக்கும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வேலைவாய்ப்புக்களில் புறக்கணிப்புச் செய்யப்பட்டுவருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் நான்கு திறமைச் சித்தி பெற்றவர்களிலும் கூடுதல் தராதரமுள்ள வணிக தகுதிப் பத்திரம் பெற்றிருந்தும் கூட அப்படிப்பட்ட தொழில்களுக்கும் மாணவர்கள் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப் படுவது இல்லையாம்.

இதுசம்பந்தமாக விசாரித்த போது ஜீ. சி. ஈ (சாதாரண) தராதரப் பத்திரத்தினும் தொழில் நுட்ப நிலைய வணிக தகுதிப்பத்திரம் சுருக்கெழுத்து தட்டெழுத்து கணக்குப் பதிவியல் பத்திரங்கள் கூடிய தராதரமுடையன வென திறைசேரியால் அறிவிக்கப் படாததே இப் புறக்கணிப்புக்குக் காரணமெனத் தெரியவருகிறது.

அதேயளவு உலகத்தையும் நேசித்தார் என்று கூறினுர்.

ஆசிரியர் நாவேந்தன் உட்பட வேறுபலரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளாக பரதநாட்டியம், நாடகம் ஆகியன நடைபெற்றன.

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

யாழ். சங்கீத சபையின் ஆதரவில் இன்று மாலை யாழ்ப்பாணம் கலைமன்ற மண்டபத்தில், திரு. கே. ஆர். நடராசாவின் இசைக் கச்சேரி நடைபெறவிருக்கிறது.

### ஆங்கில ஆசிரியர்க்கு
## 'ஐந்து வருட பயிற்சித் திட்டம் வேண்டும்'

கோட்டை, செவ்வாய்

கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தைச் சமீபத்தில் சந்தித்த அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம் ஆங்கில ஆசிரியர்களுக்கு 5 வருட பயிற்சித் திட்டம் இருக்க வேண்டும் என அமைச்சருக்கு ஆலோசனை கூறியுள்ளது.

மேற்படி சங்கம் அமைச்சரிடம் பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையங்கள் மாவட்ட ரீதியில் நிறுவப்படவேண்டும். இப்பயிற்சிக்குச் சேவையிலுள்ள ஆசிரியர்களே விசேஷ பரீட்சையொன்றின்மூலம் தெரிவு செய்யப்படவேண்டும். தற்போது அமைச்சு தீர்மானித்திருக்கும் ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு எமது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் அங்கத்துவம் வகிக்க அனுமதிக்க வேண்டும். ஆசிரியர் பதவி உயர்வு, இடமாற்றம், நியமனம் ஆகியவற்றில் ஈடுபட கல்விச் சேவைகள் கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டும். ஆரம்ப பாடசாலைகளுக்கு மேலும் 2000 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் மேற்படி கோரிக்கைகள் குறித்து கல்வியமைச்சின் கல்விக்குழுவுடன் ஆலோசனை நடத்துவதாகத் தன்னைச் சந்தித்த சங்க அங்கத்தவர்களுக்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்

ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் மேற்படி தூதுக்குழுவுக்கு சங்கத் தலைவர் திரு. எம். ஏ ஸ்ரான்லி பெரேரா தலைமை தாங்கினுர்.


# அடிக்கு ரூ. 15-00
## வீதத்திற்குமேல் சேமியுங்கள்
உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.
தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.
நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—
1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர் பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அமுக்க வேலைகளுக்கும் ஆகர்ண சக்தி உள்ள வேலைகளுக்கும் நேர்த்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.
கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.
தபாற் பெட்டி நிர். 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாஸர் மறைவுக்கு மரியாதை

# யு. எஸ். 6-வது கடற்படை பயிற்சிகளை அதிபர் நிக்ஸன் ரத்துசெய்தார்

## மரணச்சடங்குகளுக்கு கொஸிஜின் நேரில் வருவார்

ரோம், செப். 29

ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் அப்துல் நாஸர் திடீர் மறைவுக்கு மரியாதை செலுத்துமுகமாக அதிபர் நிக்ஸன் அமெரிக்க ஆருவது கடற்படையினர் நடத்தவிருந்த அணிவகுப்பு பயிற்சிகளை ரத்துச்செய்துள்ளார்.

திரு. நிக்ஸன் மத்திய தரைக்கடல்பகுதியில் அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டே இந்த உத்தரவை விடுத்தார், அவர் முன்னதாக ரோமில் அரசியல் தலைவர்களையும் பிரமுகர்களையும் சந்தித்த பின்னர் அங்கிருந்து புறப்பட்டார்.

ஆருவது கடற்படை மத்தியதரைக் கடற்பகுதிக்கு வந்ததின் காரணமாக ஜோர்டானில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை மோசமாகாமல் தடுக்கப்பட்டதாக அதிபர் நிக்ஸன் கூறினுர், இப்படை மத்திய தரைக் கடற்பகுதிக்கு வந்ததின் காரணமாக நல்ல பயன் ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அதிபர் நாஸர் மறைவு குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அரபுநாடுகள் பிரபல்யமான ஒரு தலைவரை இழந்துவிட்டன. அரபு உலகில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அவர் பெரிதும் முயற்சி செய்தார் என்ருர். அரபுக்கள் ஆத்திர உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நிலையான அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவர்

### இஸ்ரேல் பிரதமர் அதிர்ச்சி

எகிப்திய பிரதமர் நாஸர் மரணம் பற்றிய செய்தி தமக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததாக இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் தெரிவித்திருக்கிறுர்.

நாஸரின் மறைவு பற்றிய செய்திகளை இஸ்ரேல் வானெலியும் வழமையான நிகழ்ச்சிகளின் இடைநடுவில் நிறுத்திவிட்டு ஒலிபரப்புச்செய்தது.

### யுதாண்ட் கவலை

ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் நாஸர் மறைவு குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்,

கடந்த 20 ஆண்டுகளின் பின் சரித்திர புருஷராக நாஸர் இருந்துவந்துள்ளார் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறுர்.

எலிஸ்பெத் மகாராணி, பிரிட்டிஷ் பிரதமர் ஹீத், இத்தாலி அதிபர் சரகாட் ஆகியவர்களும் நாஸர் மறைவு குறித்து பரிவுச் செய்திகள் அனுப்பியிருக்கிறுர்கள், சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் நாஸரின் இறுதிச் சடங்குகளில் நேரடியாகவேகலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

### சிரியா, ஜோர்டான் கவலை

அதிபர்நாஸரின்மறைவு குறித்து சிரியா அதிபர் அத்தாஸியும் ஜோர்டான் மன்னர் ஹுசேனும் பெரிதும் கவலை தெரிவித்திருக்கிறுர்கள். இருநாடுகளிலும் அனுஷ்டிக்க முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது,

இந்த மரணத்திஞல் ஏற்பட்டுள்ள சோகத்தை விவரிக்க சொல் இல்லையென்று மன்னர் ஹுசேன் கூறியுள்ளார்.

பெய்ரூட்டிலுள்ள எகிப்திய தூதரகத்துக்கு லெபனுன் அதிபரும் பிரமுகர்களும் நேரில் சென்று கவலை தெரிவித்துக்கொண்டார்கள்.

கோட்டை, செவ்,

கடற்ருெழிலாளருக்கென புதிய குடியிருப்புத் திட்டமொன்றை உருவாக்குவதற்குகடற்ருெழில் அமைச்சு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## அமைச்சர்களின் இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் இன்றுகாலை 11 மணிக்கு நடைபெறவிருக்கும் அமரர் பண்டாரநாயக்கா நினைவு விழாவில் தபால் அமைச்சர் திரு செ. குமாரசூரியரும் ஆட்சி மன்ற விவகார அமைச்சர் திரு. கே. பி. இரத்னயக்காவும் கலந்துகொண்டு உரையாற் வார்கள்.

திரு. எஸ், பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் வடபகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா திரு அல்பிரட் துரையப்பா சுதந்திரக்கட்சி உதவிச்செயலாளர் ஜனுப் ஆலவி மௌலாஞ மன்ஞர் மாவட்ட அமைப்பாளர் ஜனுப் என் எஸ் ஏ. காதர் சாவகச்சேரி சுதந்திரக்கட்சி மாதர் முன்னணிச் செயலாளர் செல்வி சீதா வடிவேலு டாக்டர் க. வேல்மணி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

அமைச்சர்கள் இன்றுகாலை 8 மணிக்கு கைதடி சுதந்திரக்கட்சிக்கிளை சார்பில் நடைபெறும் பண்டாரநாயக்கா நினைவு விழாவில் கலந்துகொள்வார்கள். காலை 9-30 மணிக்கு மட்டுவில் சுதந்திரக்கட்சிக் கிளைக்கும் 10 மணிக்கு சரசாலை கிளைக்கும் விஜயம் செய்வார்கள்.

காலை 11 மணிக்குசாவகச்சேரியில் கடைச்சல்தொழிற்சாலையை மந்திரி குமாரசூரியர் திறந்து வைப்பார். இதைத் தொடர்ந்து சாவகச்சேரி சந்தையில் பண்டாரநாயக்கா நினைவு விழா நடைபெறும் நண்பகல் 1 மணிக்கு மிருசுவில் மகளிர் தோட்டத்தில் மதியபோசன விருந்தளிக்கப்படும்.

பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சித் தொகுதியிலுள்ள சுதந்திரக் கட்சிக் கிளைகளுக்கு அமைச்சர்கள் விஜயம் செய்வார்கள்.

மாலை 6 மணிக்கு கிளிநொச்சி ரெட்றிக் கோ மைதானத்தில் நடைபெறவிருக்கும் வானெலி விவசாயவிழாவில் அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள்.

## சலுகை பெறுவதற்காக அமைக்கப்படும் கிளைகள் ஏற்கமாட்டோம் என்கிறுர் திரு குமாரசூரியர்

தாவடி, செவ்வாய்


'வருங்காலம், இளைஞர் கையில் இருப்பதால் இளைஞர்களைச் சந்திக்கவென்றே இம்முறை யாழ்ப்பாணம் வந்துள்ளேன். தமிழ் மக்களுக்குத் தலைவராக இருப்பவர்கள், அரசியலில் கஷ்டம் ஏற்படும் போதெல்லாம் தமிழ் மக்களே நீங்கள் ஒற்றுமைப் படுங்கள் என்று கோஷம் எழுப்புவார்கள். அரசியல் பிரச்னைக்கு இதனை ஒரு மருந்தாக அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். விஞ்ஞானம் வளர்ந்துவரும் வேகத்தில் உலகம் சுருங்கிக்கொண்டு வருகிறது. வடக்கு கிழக்கு-மலையக மக்கள் மட்டும் ஒற்றுமைப்பட்டால் அவர்கள் எப்படி முன்னேற்றம் காணமுடியும்? இவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒரு பிரதேசத்தில் குடியிருந்து விட்டால் தனித்தமிழ் நாடு கிடைத்து விடுமா? தமிழ் நாட்டை எமக்குத்தரவேண்டியவர்கள் யார்? இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்களும், நாமும் உண்மையாக சகோதரர்களாக வாழவேண்டும். நாம் இலங்கையர் என்ற எண்ணம் உதித்தால்தான் இந்த நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறும். பொருளாதாரம் வளர்ந்தால்தான் எம்மிடையே உள்ள சிறிய பிரச்னைகள் தீர்ந்துவிடும்",

இவ்வாறு தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசியபோது கூறினுர்.

திரு கு. விநோதனின் தலைமையில், சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில் அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ் வைபவத்தில் உரையாற்றிய தபால் அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது.

ஸ்ரீலங்கா கூட்டுக் கட்சியிடம் சலுகைகள் பெறவேண்டுமென்பதற்காக அமைக்கப்படும் கிளைகளை நாம் ஏற்கமாட்டோம். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் இரண்டுகட்சிகளை வளர்த்து அவை ஒன்றையொன்று ஏசுகின்ற நிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள்.

இந் நிலையை மாற்றவிரும்பும் இளைஞர்கள் எமது கட்சியில் தாராளமாகச் சேரலாம். என்னைப் பற்றிச் சிலர் பரப்பும் வதந்திகளை நம்பாதீர்கள், இப்போது தமிழகத்திலிருந்து வரும் பத்திரிகைகளை தடைசெய்யப் போவதாகச் சிலர் எனக்கு எதிராகக் குற்றஞ் சாட்டுகின்றனர். நாம் பத்திரிகைகள்





## புதிய சமாதான நீதவான்

சாவகச்சேரி உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. சுப்பிரமணியம் கந்தசாமி யாழ். நீதி நிர்வாக மாவட்டத்திற்கான புதிய சமாதான நீதவாஞகவும், உத்தியோகத் தொடர்பற்ற நீதிபதிகளில் ஒருவராகவும் சாவகச்சேரி மாஜிஸ்ரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நுணுவில் திரு. சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

......

## சைபிரஸுக்கு பயணமாகிறுர்

உடுப்பிட்டி, செவ்வாய்

வங்கா தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி உறுப்பினரும், வடமராட்சிக் கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளருமாகிய திரு. பொன். குமாரசாமி ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் சைப்பிரஸுக்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் விஜயம் செய்யவிருக்கின்றுர்.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்14-ந்திகதி (30-9-70)

மேஷம்- விபத்திற்கு இடம் ஏற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும். சிலர் கடன் படவும் நேரிடும்,

ரிஷபம்- இன்று சுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை ஏற்படுத்துவதற்கு அவர் பெரிதும் முயற்சி செய்தார் என்றார். அரபுக்கள் ஆத்திர உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நிலையான அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கவலை

அதிபர் நாஸரின் மறைவு குறித்து சிரியா அதிபர் அத்தாஸியும் ஜோர்டான் மன்னர் ஹுசேனும் பெரிதும் கவலை தெரிவித்திருக்கிறார்கள். இருநாடுகளிலும் 40 நாட்களுக்கு துக்கம்

## அதிபர் நாஸரின் அரசியல் வாழ்க்கை

கமால் அப்துல் நாஸர் நடுத்தரக் குடும்பமொன்றில் பிறந்தவர். மரணமாகும் போது அவருக்கு வயது 52.

1952. ஜூலை மாதம் 23-ம் திகதி எகிப்தில் இடம்பெற்ற அரசியல் புரட்சிக்கு நாஸர் தலைமைவகித்தார். நாட்டில் ஊழல்களும், மன்னரின் ஊதாரித்தனமும் அதிகரித்ததின்காரணமாக இந்தப் புரட்சி நடத்தப்பட்டது ராணுவ அதிகாரிகளின் சுதந்திரசங்கம் இந்தப்புரட்சியை நடத்தியதால் அப்பொழுது மன்னராய் இருந்த பாரூக் நாட்டை விட்டுத்துரத்தப் பட்டார். அதன்பேரில் மேஜ ஜெனரல் நஜீப் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். நாஸர் துணைப்பிரதமராகப் பதவி ஏற்றார். 1954 ஏப்ரல் மாதம் நஜீப் பதவி நீக்கம் செய்யப்பட்டு நாஸர் பிரதம மந்திரியானார். 1956 ஜூன் 23ம் திகதி எகிப்திய மக்கள் நாஸரை ஜனாதிபதியாகத்தெரிவுசெய்தார்கள். தேசிய சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. மத சுதந்திரம் பத்திரிகை சுதந்திரம், பேச்சு சுதந்திரம், கூட்டம்கூடும் சுதந்திரம் முதலியவை பிரகடனப் படுத்தப்பட்டன. 1956-ல் அஸ்லான் அணைக்கான அமெரிக்க, பிரிட்டிஷ் சர்வதேச வங்கி உதவிகள் வாபஸ் பெறப்பட்டன. சூயஸ்கால்வாயை நாஸர் தேசியமயமாக்கி சூயஸ்கால்வாய் கம்பனியின் சொத்துக்களைக் கைப்பற்றினார். அதன்பின் அஸ்வான் அணையைக் கட்டுவதற்காக சோவியத் யூனியனிடமிருந்து கடன் உதவிகளையும், தொழில் வல்லுனர்களையும் பெற்றுக்கொண்டார்.

இஸ்ரேலுடனான தகராறுகள் 1956ல் மோசமாக, இஸ்ரேல் படைகள் எகிப்தின் சைனாய் பிரதேசத்தில் முற்றுகையிட்டன. பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் விடுத்த சண்டைநிறுத்த கோரிக்கையை எகிப்து நிராகரித்தது. அந்த ஆண்டு அக்டோபர் 13-ம் திகதி இரு நாடுகளும் எகிப்து மீது குண்டுகளைவீசினர். நவம்பர் மாதத்தில் படைகளையும் இறக்கின. இதன்மேல் ஐ.நா.வின் அமைதிக்கோரிக்கையை எகிப்தும் இஸ்ரேலும் ஏற்றுக்கொண்டன. நவம்பர் 7-ல் சண்டை நின்றது. 1967, மே 19ம் திகதி வரைக்கும் சூயஸ் கால்வாயின் 117 மைல் தூரமான கரைப்பகுதியில் ஐ. நா. படைகள் காவல்புரிந்தன. நாஸரின் வற்புறுத்தலின் பேரில் மேற்குறித்த தினத்தன்று அவைவாபஸ் பெறப்பட்டன. அதன்பேரில் எகிப்திய படைகள் மிகவிரைவாக காஸாப்பகுதியிலும் ஷார்ம் எல்ஷேக் பகுதியிலும் முற்றுகையிட்டன. அக்காபா வளைகுடாவுக்குச் செல்லும் ட்ரான் நீரிணையைமூடி இஸ்ரேல் கப்பல்களின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டது ஜூன் 5-ம் திகதி பெரும் போர் மூண்டது. 5 நாட்களின்பின் ஐ நா. முயற்சியின் பேரில் சண்டை நிறுத்தம் ஏற்பட்டது, காஸ சைனாய் பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியதோடு சூயஸ் கால்வாயின் கிழக்குக் கரையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வளைகுடாவில் போக்குவரத்தை மீண்டும் திறந்தது.

இந்தச்சண்டையின்போது நாஸர் அரபுப் படைகளுக்குத் தலைமைவகித்தார். சண்டையில்ஏற்பட்ட தோல்வியின் காரணமாக தமது பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் நாட்டுமக்கள் ஒருமித்து வற்புறுத்தியதின் பேரில் மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டார். அரபுநாடுகளை ஒன்றுசேர்க்க வேண்டும் என்று அவர் அயராது பாடுபட்டார், எகிப்தையும் சிரியாவையும் இணைத்து ஐக்கிய அரபுக் குடியரசாக்கினார். ஆனால் பின்னர் சிரியா இந்தக் கூட்டமைப்பிலிருந்து விலகிக்கொண்டது,

இந்தோனேஷியாவில்பாந்துங் நகரில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் வெற்றிக்கு மறைந்த பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேரு, யூகோஸ்லாவியா அதிபர் டிட்டோ ஆகியவர்களுடன் சேர்ந்து உழைத்தார்.




# அதிதுரித நிவாரணம் பெற, வைத்திய சாஸ்திரத் துறையில் ஒரு மகத்தான மருந்து-டிஸ்பிரின்

**டிஸ்பிரின் உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருவதன் இரகசியம் இதோ!**

உலகின் பல பாகங்களில், மக்கள் வலி நிவாரணத்துக்கு அஸ்பிரின் உட்கொள்கிறார்கள். அஸ்பிரின் உங்களுக்கு நிவாரணமளிக்க முன்பு கரைந்தாக வேண்டும். சாதாரண அஸ்பிரின் விரைவிற் கரைவதில்லை. ஆகையால் நீங்கள் பெறும் நிவாரணம் மெதுவாகவே கிடைக்கிறது.

டிஸ்பிரின் கரையக்கூடிய அஸ்பிரினகையால் அது உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் அது மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

**எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.**

சில மருந்துகள், கிரமமாகப் பாவித்தால் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். தலைவலி, நோவு, காய்ச்சல், தடிமலுக்கு நீங்கள் பாவிக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். இதற்கு, பயமின்றி உட்கொள்ளக் கூடிய மருந்தை நீங்கள் பாவிக்க வேண்டும். டிஸ்பிரின் உலகின் பல பாகங்களில் பல்லாண்டுகளாகப் பாவிக்கப்பட்டு, பாதுகாப்பான மருந்தென்றும் நம்பிக்கையோடு உட்கொள்ளக் கூடிய மருந்தென்றும் ஏற்றுக் கொள்ளப்படுவது. சில புது மருந்துகள் சுறுக்கில் நிவாரணம் தரக் கூடுமென்றாலும் அவை தரும் விளைவுகள் பெரும் பாதகமாய் முடியலாம். பிரபலமான பிரித்தானிய வைத்திய பிரசுரங்களில் எழுதும் வைத்திய நிபுணர்கள், உடம்புக்கு அபாயந் தரக்கூடிய சேர்பொருள்கள் கொண்ட அம்மருந்துகளைப் பாவிக்கக் கூடாதென்று எச்சரித்திருக்கிறார்கள். உடம்புக்கு ஆபத்தான இவ்வித சேர்பொருள்கள் டிஸ்பிரினிற் கிடையாது. ஆகையால் எவ்வித பயமுமின்றி நீங்கள் டிஸ்பிரின் உட்கொள்ளலாம். வேறும் சில கரையாத மருந்துகள் வயிற்றில் அழற்சியை உண்டாக்கக்கூடிய துகள்களை விட்டு வைக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால் அத்தகைய துகள்களை விட்டு வைப்பதில்லை. எனவே நீங்கள் நம்பிக்கையுடன் டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்**

உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

DISPRIN SOLUBLE ASPIRIN

தலைவலி, நோவு, காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை.

றக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P 0541

பரப்பும் வதந்திகளை நம்பாதீர்கள், இப்போது தமிழகத்திலிருந்து வரும் பத்திரிகைகளை தடைசெய்யப் போவதாகச் சிலர் எனக்கு எதிராகக் குற்றஞ் சாட்டுகின்றனர். நாம் பத்திரிகைகள் வருவதனைத் தடை செய்யவில்லை. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வாசகரும் தாம் விரும்பிய நூலை, அது எக்கட்சிச் சார்புடைய தாலும், எந்த ஆபாசக் களஞ்சியமாக இருப்பினும் அதனை வாசிக்கும் உரிமையை நாம் பறிக்கமாட்டோம். எந்த வாசகரும் தாம் விரும்பிய நூலை சந்தா செலுத்தி நேரடியாகப் பெறக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்'!

வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஆ.தியாகராஜா, திரு. வ.பொன்னம்பலம் உட்படப் பலரும் உரையாற்றினர்

---

## 12,000 ரூபா

கோட்டை, செவ்வாய்

தேசிய வீடமைப்பு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு ரூபா 12,000 வீடமைப்பு ஆராய்ச்சி நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழக உப வேந்தரிடம் இத்தொகை வீடமைப்பு நிர்மாண ஆராய்ச்சிக்கு மேற்படி நிறுவனத்தின் தலைவர் திரு, ஜஸ்ரின் சமரசேகராவினால் வழங்கப்படவிருக்கிறது.

---

## டிராக்டர் போட்டி பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சியில் இன்று வானொலி விவசாய விழா நடைபெறுகிறது. அண்மையில் கிளிநொச்சியில் நடந்த டிராக்டர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இவ்விழாவில் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

இரு சில்லு டிராக்டர் போட்டியில் 'யன்மா டீசல்' உபயோகித்த விவசாயிகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

முடிவுகள் வருமாறு;

திரு. கே. கதிரவேல்நாதன் (யன்மா)
செல்வி ஆர். இராசகுமாரி (யன்மா)
திரு. ஏ. கே. சோமபாலா (சட்டோ)
செல்வி ரி. கனகேஸ்வரி (யன்மா)
செல்வி எஸ். சாந்தாதேவி (யன்மா)
திரு. பி ஆர். குலநாயகம் (லான்ட்மாஸ்றர்)

(30-9-70)

மேஷம்- விபத்திற்கு இடம் ஏற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும். சிலர் கடன்படவும் நேரிடும்,

ரிஷபம்- இன்று சுவை தரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும். வெளியிடத்தில் இருந்து வியப்பூட்டும்செய்தியொன்று கிடைக்கலாம். சுகபோகநாள்.

மிதுனம்- வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும். சுபதினம்.

கடகம்- வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகின்றது. பிறந்தகத்தில் இருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

சிம்மம்-கடமையின் மூலம் சிறப்படைவீர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

கன்னி- குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும் மௌனம் நன்று.

துலாம்- தனத்துடன் வாழ்வு இன்று தவறாது கிடைக்கும், வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

விருட்சிகம்; வீட்டில் சிறுபிணி தலைதூக்கும். ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம்.

தனுசு- வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும்

மகரம்- அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.

கும்பம்- எதிர்பாரத முடிவுகள் ஏமாற்றத்தைதரலாம். எதிரிகளின்சூழ்ச்சி வளமாக இருக்கும், தனி வழிப்பயணத்தை தவிர்க்க நன்று.

மீனம்- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும் மற்றவர்கள் மெச்சும்வண்ணம் கடமையாற்றுவீர், வேண்டியவர்களின் ஆதரவு பெருகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பிறருக்குக் கொடுப்பதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது. நாம் எவ்வளவு பிறரிடமிருந்து பெறுகிறோம் என்பதிலல்ல, — மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 14-ந் திகதி (30-9-70)

## பேரதிர்ச்சி

நாஸர் மறைந்துவிட்டார் என்ற செய்தியைவிட... பேரதிர்ச்சி தரக்கூடிய செய்தி வேறு எதுவும் மேற்காசியாவிலிருந்து கிடைக்க முடியாது.

சோதனைக்கு மேல் சோதனைகளை அனுபவித்து வரும் அரபு மக்களுக்கு அஞ்சேல் என அபயமளித்து அஞ்சா நெஞ்சத்துடன் வழிகாட்டிவந்த அராபிய உலகின் விடிவெள்ளி அப்துல் நாஸரின் அகால மரணம் அராபிய மக்களுக்கு மட்டுமல்ல உலக சமாதானத்தில் விருப்பம் கொண்ட அனைவருக்குமே பேரிழப்பாகும்.

உலகம் மற்றுமொரு யுத்தத்தில் சிக்கி அழியாமல், சிறிய நாடுகளும் வல்லரசுகளின் கெடுபிடிகளுக்குப்பணியாமல் உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக உழைத்த வீரர் கமால் அப்துல் நாஸருக்கு அகில உலகமே இன்று வீரவணக்கம் செலுத்துகிறது.

ஜோர்தானில் அரசபடைகளுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கமான அரபுக்கொமாண்டோக்களுக்குமிடையில் ஏற்பட்ட சண்டை அரபுத் தலைவர் நாஸருக்கு பெரும் மனவேதனையளித்தது. அரபு மக்களின் பொது எதிரியை எதிர்த்து வெற்றிகொள்வதற்கு அரபு மக்கள் மத்தியில் ஒற்றுமை வேண்டியிருக்கும் இச்சமயத்தில் அரபுச் சகோதரர்கள் தமக்குள் சண்டையிட்டுப் பலியாவதா? என்று அவர் கவலையடைந்திருந்தார்,

கவலைப்பட்டுக் கொண்டு சும்மா இருக்கவில்லை, ஜோர்தானில் சண்டையை நிறுத்தினார். ஜோர்தான் மன்னரும் அரபுக்கொமாண்டோத் தலைவரும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடச் செய்தார்,

அரபு மக்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுவதுடன் அவருடைய கடமை முடிந்துவிட்டதுபோலும். மக்கள் ஒன்றுபட்டுவிட்டால் அவர்கள் விடுதலைபெறுவது கடினமல்லவே!

நாஸரின் பூதவுடல் மறைந்தாலும் அவரின் புகழுடல் மறையாது.

அரபு மக்களின் ஒற்றுமையும் உலக சமாதானமும் தான் அந்தத் தலைவரின் ஆத்மாவுக்கு சாந்தி அளிக்கும்.

அரபு மக்கள் தங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நிற்பதே மறைந்த தலைவருக்குச் செய்யக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்,

## பயனுள்ள ஒரு யோசனை

நமது எதிர்கால ஆட்சி முறையை வகுக்கும் வேலை தலைநகரானகொழும்பில் இப்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றது. பொதுமக்களும் ஸ்தாபனங்களும் தங்கள் கருத்துக்களை மகஜர் மூலம் அரசியல் நிர்ணய சபைக்குத் தெரிவிப்பது மட்டும் போதாதென்றும் அச்சபையின் விசேஷ குழுக்கள் நாட்டின் எல்லாப்பகுதிகளுக்கும்நேரில் சென்று மக்களின் கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென்றும், புரக் [illegible] டின் எல்லாப் பகுதிகளுக்கும் நேரில் சென்று இவ் விஷயமாக பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களையும் அறிந்து கொள்ளுவது ஜனநாயகக் கொள்கைக்கு உகந்ததாவதுடன், நாட்டின் எதிர்கால அரசியலை நல்ல முறையில் அமைக்க இது மிக உதவியாகவுமிருக்கும், ஆங்காங்கேயுள்ள மக்களுக்குப் பலபல அரசியல்குறைகள் இருக்கலாம். அவற்றை நேரில் சென்று கேட்டறிந்தால், அவற்றைப் புதிய அரசியலில்கூடுமானவரை தீர்த்து மக்கள் நல்வாழ்வு [illegible]

## தமிழ் மக்களுக்கு

# மூன்று மாதங்களுக்குள் மூன்று முக்கிய உரிமைகள் கிடைத்தன

## தபால் அமைச்சர் குமாரசூரியர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், புதன்

ஆட்சி அமைத்து 3 மாத காலத்துக்குள் தமிழர்களின் 3 முக்கிய உரிமைகளை மக்கள் அரசாங்கம் வழங்கியிருக்கிறது. முதலாவதாக அரசியல் நிர்ணய சபையில் தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிக்கப்பட்டது. இரண்டாவதாக தேசிய அரசாங்கத்தின்போது முன்னுள் கல்வி மந்திரி இரிய கொல்லையினால் மூடப்பட்ட கொழும்பு பல்கலைக்கழக தமிழ் கலைப்பீடம் 5 வருடத்தின் பின் மீண்டும் திறக்கப்பட்டது, மூன்றாவதாக சட்டக்கல்லூரியிலும், பல்கலைக்கழக சட்டப் பிரிவிலும் தமிழ் மொழிக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டது. மக்கள் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் இழந்த உரிமைகள் கிடைப்பதோடு, தமிழ்மொழிக்கும் உரிய இடம் கிடைக்கும் என உறுதியாகக் கூறுகிறேன்.

யாழ்ப்பாணத்தில் நடந்த அமரர் பண்டாரநாயக்கா நினைவுதினத்தில்தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்,

யாழ். சிங்கள மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் திரு வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மந்திரி திரு. குமாரசூரியர் மேலும் கூறியதாவது:-

தமிழ்நாட்டு சஞ்சிகைகளுக்கு தடை விதிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் எவரும் எந்தப் பத்திரிகையையும் பெறமுடியும் இந்த முடிவு அரசாங்கம் செய்ததல்ல இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்க [illegible] பிரச்னை சமுதாயப்பிரச்னை என்றும் தமிழ் மக்கள் ஆராய்ந்து தங்கள் கருத்தை தெரிவிக்கவேண்டும் என்றும் கூறினேன்.

### குழுவொன்றை நிறுவினேன்

வடக்கு கிழக்கு மாகாணத்தையும், மலைநாட்டையும் சேர்ந்த தமிழ் எழுத்தாளர் பத்திரிகையாளர் கொண்ட குழு ஒன்றை நிறுவினேன். இந்தக்குழுவில் 25 பேர் இருந்தனர். இக்குழு இப்பிரச்னைபற்றி நன்கு அலசி ஆராய்ந்தது. சங்கங்கள், கழகங்கள் தனிப்பட்டவர்கள் தங்கள் கருத்தை இக்குழுவிற்கு அனுப்பினார்கள். இக்குழு அக்கருத்துக்களை ஒன்று திரட்டி அறிக்கைவடிவில் சமர்ப்பித்து சஞ்சிகைகள் இறக்குமதியில் ஊழல் இருப்பதாக அக்குழுதெரிவித்தது.

ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்குமிடையில் உள்ள கலை கலாச்சார தொடர்புகளை எந்த அரசாங்கம் வந்தாலும் அழிக்கக்கூடாதென்றும் அக்குழு தெரிவித்தது. தனிப்பட்ட ஒருவர் எண்ணத்திற்கு ஏற்றபடி எந்தப் பத்திரிகையையும் வரவழைக்க வசதியளிக்கவேண்டும் என குழு சிபார்சு செய்தது. இந்தச் சிபார்சு அமுல் நடத்தப்படும்.

நமது நாட்டில் ஏராளம் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள் சீப்புமுதல் சோப்பு வரை சாறிமுதல் சப்பாத்து வரை இந்த நாட்டில் உற்பத்தி செய்யும்போது இந் [illegible]டிலிருந்து ஏன்சஞ்சிகைகளை வெளியிடக் கூடாது. உள்நாட்டு பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் எப்படி வளர்க்க வேண்டும் என்றுகுழு தெரிவித்துள் [illegible]

### எல்லோருக்கும் சம உரிமை

புதிய அரசியல் நிர்ணய சபையில் வெவ்வேறு கலை கலாச்சாரத்தை கொண்ட மக்கள் இருந்தபோதிலும், இலங்கையர் என்ற நாமத்தின் அடிப்படையில் தான் இயங்கிவருகிறது எல்லா இன மக்களுக்கும் இந்த நாட்டில்சரிசமஉரிமைஉண்டு என்பதைவைத்தே அரசியல் நிர்ணயசபை இயங்கிவருகிறது. ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் இதில் ஒற்றுமையாகஇயங்கி வருகின்றார்கள்.

ஒற்றுமைவளரக் கூடிய பொருளாதார நிலை நாட்டில் ஏற்படவேண்டும். பொருளாதாரம் உயர வித்தியாசம் வேற்றுமை அற்றுப்போகும். அதன்பின் ஒற்றுமை ஏற்படும்,

மொழிப்பிரச்னை இனப்பிரச்னை உட்பட பல்வேறு பிரச்னைகள் பொருளாதாரம் வளர தானகவே மறைந்து விடும் இதற்கு சோஷலிச பாதையில் முன்செல்ல வேண்டும் இந்த அடிப்படையில் தான் அரசாங்கம் செயல்பட்டுவருகிறது.

### பொறுமையும் ஒற்றுமையும்

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் அவர்களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் மறையவேண்டுமானால் அதற்கு பொறுமை தேவை. இலங்கையர்என்ற ரீதியில் இந்நாடு சுபீட்சமடைய ஒற்றுமை தேவை. எங்கள் குறை[illegible]ளைப் பொறுத்து பொருளாதார வளர்ச்சியில் அக்கறை காட்டினால் நமது லட்சியங்களையும் பறிகொடுத்த உரிமைகளையும் சம உரிமைகளை [illegible]

ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கத்தையும்எதிர்த்து வந்தார்கள் உதாரணமாக இருசகோதரர்கள் ஒரு காணிக்கு பங்காளராக இருந்தார்கள் ஒருவர் கோபித்துக் கொண்டு காணிக்குப் போகாமல் விட்டுவிட்டார். இதனால் மற்றவர் முழு வருமானத்தையும் பெற்று வந்தார். இந்தநிலையில்தான் தமிழ் மக்கள் இதுவரை காலமும் இருந்து வந்திருக்கிறார்கள் இதனால் தமிழர்கள் பல உரிமைகளை இழந்தார்கள் தமிழர்களும் இந்நாட்டிற்கு சொந்தக்காரர் என்பதை உணர வேண்டும், எங்கள் உரிமைகளை பெற நாம் ஒற்றுமையாகஉழைக்க வேண்டும் எங்கள் உரிமைகளைப்பெற முயற்சிக்கும்போது மற்றவர்களின் உரிமைகள்பற்றியும்சிந்திக்க வேண்டும். இதுதான் சோஷலிஸ மனப்பான்மை,

தான் தனிப்பட்ட முறையில் எப்பொழுதும் ஒரு பண்பைகையாண்டு வருகிறேன், தனிப்பட்ட முறையில் எவரையுமோ எந்தக் கட்சியையுமே தாக்கிப் பேசுவதில்லை இதனால் சிலர் என்னை கோழை எனக்களுதலாம் அப்படிநினைததால் அதன் விளைவுகளை அவர்களே ஏற்கவேண்டிவரும். ஆட்சி பீடத்திலிருக்கும் நாம் எதிர்க்கட்சியினருக்கு மதிப்புக் கொடுக்காது தாக்கிப்பேசினால்எங்கள்பண்பை இழந்து விடுவோம். இந்தப் பண்பை நான் கடைப் பிடித்துவருகிறேன்.

### தற்காலிக...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

லம் திரும்பினார், ஜோர்டானில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அரபு லீக் தலை [illegible]

நியமன எம். பி. திரு, எம். சி சுப்பிரமணியம் திரு எஸ் கந்தசாமி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நிமால் அமரசேகரா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## தமிழ் பெற்றோர்களை எதிர் நோக்கும் பிரச்னை

புத்தூர். செவ்வாய்

தமிழ்ப் பிள்ளைகளுக்கு இனிமேல் திறமையின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படமாட்டாது. விகிதாசார அடிப்படையில் தான் நியமனம் வழங்கப்படும். இதனால் தமிழ்ப் பெற்றோர்களை எதிர்காலத்தில் பெரும் ஆபத்து காத்திருக்கிறது

அச்சுவேலி சென் திரேசா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் தினவிழாவில் கோப்பாய் எம். பி. திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணப் பெற்றோர் அனைவரும் தங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வடமாநில கல்வி வித்தியாதிபதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பாடசாலை மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

## ஐந்து மாநில அரசு சமஷ்டி அமைப்பு

### தமிழரசுப் பொதுச்சபை ஏற்றது

யாழ்ப்பாணம், புதன்

ஐந்து மாநில அரசுகளைக் கொண்ட சமஷ்டி அரசியல் அமைப்பை நிறுவ வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசுக்கட்சி சமர்ப்பிக்கவிருக்கும் கோரிக்கை, நேற்று நடந்த தமிழரசுக் கட்சி பொதுச்சபை கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழரசுக்கட்சி உபதலைவர் பண்டிதர் கா பொ இரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கும், தமிழரசுக் கட்சி அறிக்கைபற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

இந்த அறிக்கையில் ஒவ்வொரு பகுதியாக சபையினர் ஆராய்ந்து தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

தாய்மொழியை போதனமொழியாக்குவதென்று அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டால்தமிழ் பிள்ளைகள் 7-ம் வகுப்பிலிருந்து சிங்களத்தை ஒரு பாடமாக கற்பிப்பதுபற்றிய அம்சம்பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது

## 'சஞ்சிகைகள் தடையை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...அச்சபையின் விசேஷ குழுக்கள் நாட்டின் எல்லாப்பகுதிகளுக்கும்நேரில் சென்று மக்களின் கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென்றும், புரக்டர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கின்றார். பிரிட்டன் ஆட்சிசெய்தகாலத்தில், அங்கிருந்து அரசியல் சீர்திருத்த கமிஷனர்கள் இங்கு விசாரணை செய்ய வந்திருந்த காலத்தில், தீவின் எல்லாப்பகுதிகளுக்கும் சென்று, மக்களின் கருத்துக்களை நேரில் கேட்டறிந்திருக்கையில். சுதந்திர இலங்கை அரசாங்கம் ஏன் அப்படியே செய்யக்கூடாது என்று கேட்கிறார் அவர்.

தூர இடங்களிலிருந்து கொழும்புக்கு வந்து சாட்சியமளிக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் பலருக்கு இராது. அரசியல் நிர்ணய விஷயம் மிகமிக முக்கியமானதால், அச்சபையின் விசேஷ குழுக்கள் நாட்டிலுள்ள மக்களுக்குப் பலபல அரசியல்குறைகள் இருக்கலாம். அவற்றை நேரில் சென்று கேட்டறிந்தால், அவற்றைப் புதிய அரசியலில்கூடுமானவரை நீக்கி மக்கள் நல்லவாழ்வு வாழச் செய்யக்கூடியதாக இருக்கும்.

பிரதமரும் அரசியல் நிர்ணய சபையாரும், திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ள இந்த யோசனையை கவனித்து இதை நிறைவேற்றிவைக்க ஆவன செய்யவேண்டும். இதற்குச் சற்றே பணச்செலவும் காலதாமதமும் ஆகுமென்று கூறப்படக் கூடும் ஆனல் நாட்டின் எல்லாப்பகுதி மக்களுக்கும் தங்கள் கருத்துக்களை இம் முக்கிய விஷயத்தில் தெரிவிக்க சமசந்தர்ப்பம் அளிப்பதால் ஏற்படக்கூடிய பலன்களை கவனிக்கையில், இதற்காகும் செலவும் தாமதமும் பெரிதாக மாட்டாது.

## அரசாங்கத்தின் முதற் கடமை

ஒரு நல்ல அரசாங்கத்தின் முதல் கடமை, மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் காத்து அவர்கள் நிம்மதியாக வாழும்படி செய்வதேயாகும். ஆனல் இன்று தலைநகரான கொழும்பு உள்ளிட்டுப் பல இடங்களிலும் திடீர் திடீரெனக் கத்திக்குத்துகளும், வழிப்பறிக் கொள்ளைகளும் நடப்பதைப் பார்க்கையில் இலங்கை அரசாங்கம் மேற்குறித்த தனது முதற் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

உலகில் சில நாடுகளில் உள்ள நிலைமையில் ஒப்பிடுகையில் நம் இலங்கையிலுள்ள நிலைமை மேல் என்று கூறவேண்டும் தான். ஆனலும் இங்கு வரவரப் பலாத்காரச் சம்பவங்கள் அதிகரிப்பதையும், மக்களில் பலர் நிம்மதியாக வாழமுடியாமல் தவிப்பதையும் பார்க்கையில், அரசாங்கம் இந்தநிலை மேலும் மோசமாகாதபடி தடுக்க விஷேச நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பது விளங்கும் மக்கள் அமைதியாக வாழ முடியாவிட்டால், அரசாங்கம் தன் கடமையில் தவறியதாவதுடன், அரசாங்கமே நீடித்திருக்கமுடியாதுபோகும். அரசாங்கத்தால் மட்டும் இந்த நிலைமையைச் சீர் செய்ய முடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்கு இன்றியமையாதது.

குற்றங்கள் அதிகரிப்பதாயின், அதற்கு அடிப்படையான சில காரணங்கள் இருக்கத்தான் வேண்டும். குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களை தண்டிப்பதால் மட்டும் பயன் ஏற்பட முடியாது. குற்றவாளிகள் அனைவரையும் கண்டுபிடிக்கமுடியுமா என்பது சந்தேகம். ஒவ்வொரு குற்றமும் செய்வதற்கான காரணத்தை விசாரித்து அறிந்து அதை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே, குற்றங்கள் செய்யப்படாமல் தடுப்பதற்கும், பொது மக்களை நிம்மதியாக வாழச் செய்வதற்கும் சரியான வழி ஆகவே மக்கள் அரசாங்கம், குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதுடன் தன் கடமை முடிந்துவிட்டதென்று கருதாமல், குற்றம்செய்ய நேரிட்ட காரணங்களையும் விசாரித்து அறிந்து, அதற்கான காரணங்களையும் நீக்க ஆவனசெய்தல் வேண்டும். இதற்குப் பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகும். பொதுமக்கள் ஒத்துழைத்து உதவுவதால், அவர்கள் நாட்டுக்கு மட்டுமன்றித் தங்களுக்குத் தாங்களே நன்மை செய்துகொண்டவர்களாவர்.

...களுக்கு தடை விதிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் எவரும் எந்தப் பத்திரிகையையும் பெறமுடியும் இந்த முடிவு அரசாங்கம் செய்ததல்ல இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்களைக்கொண்டு குழுசெய்த சிபார்சைத் தான் அரசாங்கம் அமுல் நடத்துகிறது.

சஞ்சிகைகள் பற்றி முதன் முதலாக, எழுத்தாளர் மொஹிதின் பிரதமரிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்திருந்தார். இது பற்றி எனக்குத் தெரியாது: சஞ்சிகை இறக்குமதியில் ஊழல் இருப்பதாகவும், ஈழத்துத் தமிழ் எழுத்தாளருக்கு கஷ்டமிருப்பதாகவும் அந்த மகஜரில் கூறப்பட்டிருந்தது.

பிரதமர் என்னிடம் அந்த மஜரைக்கொடுத்து 'இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டார். இதற்கு அவகாசம் வேண்டுமென்று சொன்னேன். 2 கிழமைக்கு பின் அதைப் பற்றி பிரதமர் என்னிடம் விசாரித்தார். இந்தப் பத்தி செய்யும்போது இதிலிருந்து ஏன் சஞ்சிகைகள் வெளியிடக் கூடாது. உள்நாட்டு பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் எப்படி வளர்க்க வேண்டும் என்றுகுழு தெரிவித்துள்ளது.

காலத்திற்குகாலம் உதாரண புருஷர்கள் லட்சியவாதிகள் தோன்றுகின்றார்கள். ஒரு நாட்டிற்கு சுதந்திரம் வழங்கப்படும் நேரத்தில் கடவுள் உதாரண புருஷர்களை தோற்றுவிக்கிறார் இந்த வரிசையில் தோன்றியவர்தான் அமரர் பண்டாரநாயக்கா. 22 வருடத்திற்கு முன்னர் இந்நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது. அது உண்மையான சுதந்திரமல்ல. உண்மையான சுதந்திரத்தை பெறப் பாடுபட்ட அமரர் பண்டாரநாயக்க 56ம் ஆண்டு, மக்கள் அரசாங்கத்தை நிறுவினர். உண்மையான சுதந்திரதாகத்தை மக்களுக்கு ஊட்டியவர் அமரர் பண்டாரநாயக்கா.

...மையை ஒற்றுமை ... எங்கள் குறை ... பொறுத்து பொருளாதார வளர்ச்சியில் அக்கறை காட்டினால் நமது லட்சியங்களையும் பறிகொடுத்த உரிமைகளையும் சம உரிமைகளையும் சேர்த்து ...யான உரிமையுடன் நாமும் இந்நாட்டு மன்னர்களென வாழக்கூடிய நிலை ஏற்படும்.

அதேநேரம் சிங்கள சகோதரர்களுக்கு ஒன்று சொல்லிவைக்க விரும்புகிறேன் மற்ற இனத்தை மதித்து நடக்காவிட்டால் நாட்டில் ஒற்றுமை ஏற்படாது அத்துடன் பொருளாதாரம் வளர்ச்சியடையாது. பொருளாதாரம் வளராவிட்டால் நாடு முன்னேறாது முன்னேறாவிட்டால் சிங்கள மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதைநினைவில் கொள்ள வேண்டும்.

கடந்தகாலத்தில் தமிழர்களின் உரிமைகள் எப்படிப் பறிபோனது? 1931-ம் ஆண்டு முதல் தமிழர்கள் பகிஷ்கரிப்பு நடத்தினர்கள். அதைத் தொடர்ந்து

## தற்காலிக...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

லம் திரும்பினர், ஜோர்டானில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அரபு லீக் தலைவர்கள் மாநாட்டின் இறுதி நடவடிக்கைகளில் அவர் கலந்து கொண்டார். ஜோர்டான் மன்னர் ஹுசேனையும், கொமாண்டோ தலைவர் அரபாத்தையும் சமாதான உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திடச் செய்தது அவரது பெரிய சாதனைகளில் ஒன்ருகும்.

...கவீனம் அடைவதற்கு முன்புவரை அவர் திடகாத்திரமாக இருந்தார். மரணமாவதற்கு சுமார் மூன்று மணி நேரத்துக்கு முன்னர் அவருக்கு நோய் ஏற்பட்டது. பின்னர் அமைதியாக உயிர் பிரிந்து விட்டது. இலங்கை நேரம் இரவு சுமார் 9 மணிக்கு சற்றுமுன்னர் மரணம் ஏற்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

அதிபர் நாஸரின் மரணச் செய்தி அறிவிக்கப்படு முன்னர் கெய்ரோ வானெலியில் சுமார் அரைமணி நேரத்துக்கு புனித குர்-ஆனிலிருந்து வாசகங்கள் படிக்கப் பட்டன. பின்னர் மிகவும் தளர்ந்தகுரலில் வேதனையுடன் துணை அதிபர் அன்வர்சதாத் துக்கசெய்தியை அறிவித்தார். அதன் பிறகும் குர்ஆன் ஓதப் பட்டது.

அரபு மக்களும் உலக மக்களும் அன்போடுநேசித்தவரும் நெஞ்சுரமும் நேர்மைத்திறனும் கொண்டவருமான மிகச்சிறந்த தலைவரை நாம் இழந்துள்ளோம் என்று சதாத் கூறினர். அரபுமக்களை சூழ்ந்துள்ள பயங்கரத்தை நீக்குவதற்கு அவர் முயன்று கொண்டிருந்த வேளையில் மரணம் சம்பவித்துள்ளது என்ருர். துணை அதிபர்

அதிபர் நாஸர் கடந்த ஜுலையில் மாஸ்கோ சென்று நீரிழிவுக்காகச் சிகிச்சை பெற்றுத்திரும்பினர். அவர் திடகாத்திரத்துடனிருப்பதாகஅப்பொழுது சோவியத் டாக்டர்கள் கூறியிருந்தார்கள் அதன் பிறகு பெரிய வருத்தம் எதனுலும்அவர் பீடிக்கப்படவில்லை.

நாஸரின் மரணச்செய்தியை அரபு நாடுகளின் வானெலிகளும் பி. பி. ஸி. யும் இந்தியவானெலியும் வழமையான செய்திகளை நிறுத்தி இடைநடுவில் அறிவித்தன இஸ்ரேல் வானெலியும் இவ்வாறே அறிவித்தது.

(3-ம் பக்கமும் பார்க்க)

...தமிழரசுக்கட்சி உபதலைவர் பண்டிதர் கா பொ இரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்... பிள்ளைகள் 7-ம் வகுப்பிலிருந்து சிங்களத்தை ஒரு பாடமாக கற்பிப்பதுபற்றிய அம்சம்பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது

## 'சஞ்சிகைகள் தடையை நீக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன் தமிழ் சஞ்சிகைகள்இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்துள்ள தடையைநீக்கவேண்டுமென பிரதமரைக்கோரும் தீர்மானம் தமிழரசுக்கட்சிப் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் தடைசெய்யப்பட்டுள்ளதால், குறிப்பிட்டபத்திரிகைகளை கடைகளில்பெற முடியாது வ...கர்கள் கஷ்டமடைய வேண்...யுள்ளதாகவும், அவற்றின் இறக்குமதியைத்தடைசெய்யவேண்டு... மென்றும் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமலை இ.போ ச. ஊழியர்சபைத் தேர்தலை இதுவரைநடத்தாதற்கு பொதுச்சபை கண்டனம் தெரிவித்தது. தமிழ் ஊழியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்குமென்ற காரணத்தாலேயே இத்தேர்தல் இதுவரைநடைபெறவில்லையென சபை கருத்துத் தெரிவித்ததுடன் திருமலை இ போ ச தமிழ் ஊழியர்களின் இடமாற்றம் ரத்துச்செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழகபொறியியல் பகுதிக்கு மாணவர்களை இன அடிப்படையில் தெரிவுசெய்யும் முறையை சபை பலமாகக்கண்டித்ததுடன் திறமை அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றும் தவறும் பட்சத்தில் இதுசம்பந்தமாக தமிழரசுக்கட்சி இயக்கமொன்றை நடத்துவதென்றும், கடந்த ஒன்றரைவருடகாலமாக சிங்களத்தேர்ச்சி காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த நெசவு ஆசிரியர்களில் சிலருக்கு சில நிபந்தனைகளின் பேரில் மீண்டும்வேலை அளிக்கப்பட்டது போல் மிகுதிப்பேரையும் மீண்டும் வேலைக்கமர்த்த வேண்டுமென்றும்தீர்மானிக்கப்பட்டது.

அக்டோபர் 21,22ம்திகதிகளில் கட்சிச் செயற்குழுக் கூட்டம் நடத்துவதென்றும், அடுத்த ஆண்டு ஏப்ரலில் மூதூரில் அல்லது வவுனியாவில்கட்சிமகாநாட்டை நடதிதுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சிலைபற்றி சந்தேகம்

சென்னை, செப். 29 சென்னையில் விநாயகர் விக்கிரகம் ஒன்றுதானே தோன்றியிருப்பதாகக் கூறப்படுவதுபற்றி பொலிஸ் அதிகாரிகள் சந்தேகம் தெரிவிக்கிருர்கள். இந்தவிக்கிரகம் தோன்றியதுபற்றி பொலிசார் நடத்திய விசாரணைகளும், சோதனைகளும் அது பூமியிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுவதற்குமாருக விருப்பதாக உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடையாறில் விளுயகர் சிலையொன்று காணுமல் போனதாக பொலிசாருக்குப் புகார்செய்யப்பட்டதாம். இந்தச்சிலை அதுவாகவிருக்கலாம் என்று இப்பொழுது கருதப்படுகின்றதாம். அடையாற்றில் காணுமற்போன சிலைபற்றிய அடையாளங்களைப் பொலிசார் கேட்டிருக்கிருர்கள்.

## நாஸரின்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாளை 30ந் திகதியும் 1-ம் திகதியும் துக்கதினமாக இலங்கை அரசு பிரகடனப் படுத்தியுள்ளது. அத்துடன் 1-ம் திகதி அரசாங்க வர்த்தக விடுமுறைதினமாகவும் இலங்கை அரசு பிரகடனப் படுத்தியுள்ளது.

### அரைக்கம்பத்தில் தேசியக்கொடிகள்

நாஸரின் மரணத்தையொட்டி இலங்கையிலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களிலும் அரைக்கம்பத்தில் தேசியக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

—

கோட்டை, செவ்வாய் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா லண்டனில் பிரிட்டிஷ் நிதியமைச்சரையும் மற்றும் பொருளாதார நிபுணர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சென்ற இடங்களிலெல்லாம் நாட்டின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்கான வழிகளையும் டாக்டர் பெரேரா ஆராய்ந்தார்.



அரஸ்கோ சகோதரிகள் ரமணி, நளினி அரசரத்தினம் அவர்களின் குறத்தி நடனமும் மயில் நடனமும் மற்றும் பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் இன்று கிளிநொச்சி ஞெட்றிகோ மைதானத்தில் நடைபெறும் வானெலி விவசாய விழாவில் தபால் தந்தி அமைச்சர் செ. குமாரசூரியர் ஆட்சிமன்ற அலுவல்களுக்கும் விளையாட்டுகளுக்கும் அமைச்சரான கே. பி. இரத்நாயக்கா ஆகியோரின் முன்னிலையில் நடைபெறும்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org